இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 27.03.2026

# அ.தி.மு.க. அறிக்கையின் அபத்தங்கள்!

அறிக்கை என்ற பெயரால் அபத்தக் களஞ்சியத்தை வெளியிட்டு விட்டுப் போயிருக்கிறார் பழனிசாமி. 'உண்மை, உழைப்பு, உயர்வு என்று நடைபோடும் கடைசித் தொண்டனாம்' எடப்பாடி பழனிசாமி. தன்னைத் தானே சொல்லிக் கொள்கிறார். அவர் யாருக்கு உண்மையாக இருந்தார். தனக்குப் பதவி கொடுத்த சசிகலாவுக்குக் கூட உண்மையாக இல்லை. 'நீ ஏன் கட்சியை சொந்தம் கொண்டாடுகிறாய்? எனக்கு பதவி வாங்கிக் கொடுத்தாயா?' என்று ஒருமையில் கேட்ட பச்சோந்திதான் பழனிசாமி. இதனை அ.தி.மு.க. தொண்டர்கள் அத்தனை பேரும் உணர்வார்கள்.

இவரைப் பற்றி ஜெயலலிதாவுக்கே நன்கு தெரியும். அதனால் தான் பல முறை அவரது பதவியை ஜெயலலிதாவே பறித்துள்ளார். 1990 ஆம் ஆண்டு சேலம் மாவட்டச்செயலாளர் ஆன பழனிசாமியின் பதவியை சில ஆண்டுகளிலேயே ஜெயலலிதா பறித்தார். சேலம் புறநகர் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் பதவி பழனிச்சாமிக்குத் தரப்பட்டது. சில ஆண்டுகளில் அதுவும் பறிக்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் ஆனார் பழனிசாமி. சில ஆண்டுகளில் அந்தப்பதவியும் ஜெயலலிதாவால் பறிக்கப் பட்டது. 2008 இல் மீண்டும் பதவி தரப்பட்டது. அது மீண்டும் பறிக்கப்பட்டது. பழனிசாமியிடம் உண்மையும் கிடையாது, உழைப்பும் கிடையாது, வெறும் பிழைப்புதான் உண்டு என்பதை ஜெயலலிதா அறிவார். இதெல்லாம் அ.தி.மு.க. தொண்டர்களுக்கு நன்கு தெரியும். அதனால்தான் இவரது தலைமையை அ.தி.மு.க. தொண்டர்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கவில்லை.

'அ.தி.மு.க.வை கட்டிக் காத்தாராம்'. இதையே அவர் சொல்லிக் கொள்கிறார். ஜெயலலிதா காலத்து அ.தி.மு.க. இன்று இருக்கிறதா?

**2019 - நாடாளுமன்றத் தேர்தல், 2019 - சட்டமன்ற இடைத்தேர்தல், 2019 ஆம் ஆண்டில் 9 மாவட்ட ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - ஊரக உள்ளாட்சித் தேர்தல், 2021 - தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல், 2022 - நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல், 2023 - ஈரோடு இடைத்தேர்தல், 2024 - நாடாளுமன்றத் தேர்தல், 2024 - விக்கிரவாண்டி சட்டமன்ற இடைத் தேர்தல் - ஆகிய அனைத்துத் தேர்தலிலும் தோற்றவர் தான் பழனிசாமி.**

அதிலும் குறிப்பாக நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் அ.தி.மு.க.வை அதல பாதாளத்துக்குக் கொண்டு போய் போட்டார் பழனிசாமி. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் 40 தொகுதியிலும் தோற்றவர்தான் பழனிசாமி. தென் சென்னை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், தேனி, தூத்துக்குடி, நெல்லை, வேலூர் ஆகிய 7 தொகுதியில் அவருக்கு டெபாசிட் போய்விட்டது. 12 தொகுதியில் மூன்றாவது இடத்துக்கு பழனிசாமியின் கட்சி போனது. கன்னியாகுமரி தொகுதியில் நான்காவது இடம் போனது பழனிசாமியின் கட்சி. இவர் தான் அ.தி.மு.க.வை காத்தேன் என்கிறார். ஒருவேளை அ.தி.மு.க. தலைமைக் கழகத்தை மிச்சம் வைத்திருப்பதால் அ.தி.மு.க.வைக் காத்தேன் என்கிறாரா?

'இயன்றதைச் செய்வோம் இல்லாதவர்க்கே' என்பது இவரது இலட்சியமாம். இவர் முதலமைச்சராக இருந்த போது இல்லாதவர்க்கு ஏதாவது செய்திருப்பாரா? தனது சம்மந்திக்கு செய்தார். சம்மந்தியின் சம்மந்திக்கு செய்தார். மற்றபடி இல்லாதவருக்கு ஏதும் செய்ததாக யாரும் இதுவரை சொல்லவில்லை. 2016 ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டதையாவது நிறைவேற்றினார்களா? என்றால் அதுவும் இல்லை.

**எடப்பாடி பழனிசாமி வெளியிட்ட அறிக்கையில் அபத்தத்தின் உச்சம் என்பது, 'மத்தியில் யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பது முக்கியமல்ல. அவர்கள் மூலம் தமிழக மக்களின் நலனுக்காக திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும் என்பதே எங்கள் லட்சியம்' என்று சொல்லி இருப்பதுதான். பா.ஜ.க.வுக்கு பாதம் தாங்கி வரும் பழனிசாமி, அப்படி எத்தனை திட்டத்தை ஒன்றிய அரசிடம் பேசி தமிழ்நாட்டுக்கு கொண்டு வந்தார்? மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை சீக்கிரம் கட்டித் திறங்கள் என்றாவது ஒரு வார்த்தை சொல்லி இருப்பாரா?**

**யார் ஆட்சியில் இருக்கிறார்கள் என்பதுதானே முக்கியம்? பா.ஜ.க., பழனிசாமிக்கு நன்மை செய்திருக்கலாம். அவரையும் அவரது மாஜிக்களையும் உறவினர்களையும் ஊழல் வழக்குகளில் இருந்து காப்பாற்றி இருக்கலாம். புலனாய்வு அமைப்புகளின் பிடியில் இருந்து விடுவித்து இருக்கலாம். ஆனால் தமிழ்நாட்டுக்கு ஒன்றிய பா.ஜ.க. அரசால் ஒரு செப்படிகூட லாபம் இல்லை. நன்மை செய்யவில்லை என்பதை பா.ஜ.க.வே அறியும். மற்ற மாநிலங்களுக்காவது தேர்தல் நேரத்தில் திட்டங்கள் அறிவிப்பார்கள். ஆனால் தமிழ்நாட்டுக்கு தேர்தல் நேரத்தில் கூட அறிவிப்பது இல்லை. தமிழ்நாடு என்றதும் கல் நெஞ்சாக அவர்களுக்கு மாறிவிடும். அத்தகைய பா.ஜ.க.விடம் கூட்டுச் சேர்ந்து நன்மை செய்யப் போகிறாராம் பழனிசாமி.**

**'மாநிலங்களுக்கு உரிய நிதி தர வேண்டும்' என்று ஒன்றிய அரசிடம் இப்போது கோரிக்கை வைக்கும் பழனிசாமி, ஐந்தாண்டு காலம் முறையாக நிதி தராத ஒன்றிய அரசை ஒருமுறையாவது கேட்டிருப்பாரா?**

**"இந்த இயக்கத்திற்கு தனிக் கொள்கைகள் உண்டு. மதச்சார்பின்மை, மனிதநேயம், ஏழை எளியோர் மேம்பாடு, சமூக நீதி, சமத்துவம், சிறுபான்மையினர் பாதுகாப்பு போன்றவை எங்களின் உயிர்நாடி. அவற்றில் எந்தச் சமரசமும் செய்து கொள்ள மாட்டோம். அதன்படியே நாங்கள் செயல்படுகிறோம். தொடர்ந்து செயல்படுவோம்" என்று சொல்வதற்கு வெட்கமாக இல்லையா? குடியுரிமைச் சட்டத்தை ஆதரித்து வாக்களித்தது யார்? இந்தியா முழுவதும் இசுலாமியர்கள் அந்தச் சட்டத்துக்கு எதிராகப் போராடிய போது, 'எந்த முஸ்லிம் பாதிக்கப்பட்டார்? காட்டுங்கள்' என்று கேட்டவர்தான் பழனிசாமி. போராடிய இஸ்லாமியர் மீது தடியடித் தாக்குதலை நடத்தியவர்தான் பழனிசாமி.**

"நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அளித்தார்கள், கடன் சுமையில் தள்ளினார்கள்" என்கிறது அறிக்கை. ஆனால் தி.மு.க.வின் வாக்குறுதிகளைத்தான் பழனிசாமி கொடுத்துக் கொண்டு இருக்கிறார். மகளிர் உரிமைத் தொகை, கனவு இல்லம், விடியல் பயணம் என்று 'திராவிட மாடல்' அரசு எதையெல்லாம் செய்து வருகிறதோ, அதையே காப்பி அடித்து சொல்லிக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி. 'எப்படி இத்தனை திட்டங்களை நிறைவேற்றுவீர்கள்?' என்று கேட்டால், 'வரியை ஏற்றுவோம்' என்று சொன்ன பொருளாதார மேதை தான் பழனிசாமி.

**'நாம்தான் ஆட்சிக்கு வரப்போவது இல்லை, வாய்க்கு வந்ததை அடித்து விடுவோம்' என்று அபத்தக் குவியலாக ஒரு அறிக்கையை தயாரித்து வெளியிட்டுள்ளார், மக்களிடம் இருந்து தோல்வியை மட்டுமே பரிசாகப் பெற்று வரும் 'பக்கா தோல்வி' பழனிசாமி.**

## கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அ.ம.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி தலைமையில் தஞ்சை மாவட்ட அ.ம.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!



சென்னை, மார்ச் 27-

முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தஞ்சை மத்திய மாவட்டம் அ.ம.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி தலைமையில் தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏழுப்பட்டி ஜி.பாலு, அம்மாபேட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.கோவிந்தசாமி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலாளர் என்.ஏ.பட்டாபிராமன், சரத்குமார், மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் சண்முகசுந்தரம், மாவட்ட ஐடி விங் இணைச் செயலாளர் சி.புருஷோத்தமன், துணைச் செயலாளர் அன்பன்தமிழ், வழக்கறிஞர் அணி எஸ்.பிரபு, ஆசிரியர் கே.சந்திரமோகன், எஸ்.பாலமுருகன் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (26.3.2026) மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தஞ்சை மத்திய மாவட்டம், அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி அவர்கள் தலைமையில், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏழுப்பட்டி ஜி.பாலு, அம்மாபேட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.கோவிந்தசாமி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலாளர் என்.ஏ.பட்டாபிராமன், சரத்குமார், மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் சண்முகசுந்தரம், மாவட்ட ஐடி விங் இணைச் செயலாளர் சி.புருஷோத்தமன் துணைச் செயலாளர் அன்பன்தமிழ், வழக்கறிஞர் அணி எஸ்.பிரபு, ஆசிரியர் கே.சந்திரமோகன், எஸ்.பாலமுருகன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச்செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன், எம்.எல்.ஏ., தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், ஆகியோர் உடனிருந்தார்.

## தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக –

# அமித்ஷா கொடுக்கும் 'ஸ்கிரிப்ட்'களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார் எடப்பாடி!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

**சென்னை, மார்ச் 27–**

**தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக – அமித்ஷா கொடுக்கும் 'ஸ்கிரிப்ட்'களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார் எடப்பாடி பழனிசாமி என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றம் சாட்டினார்.**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அ.தி.மு.க. கூட்டணியின் தலைவராகச் சொல்லப்படுகின்ற எடப்பாடி பழனிசாமி, தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக தி.மு.க. கூட்டணியைத் தேவையற்று விமர்சனம் செய்து வருகிறார்.

ஒருகாலத்தில் வட இந்தியத் தலைவர்கள் அ.தி.மு.க. தலைவரைச் சந்திப்பதற்காக அவர் வீட்டு வாசற்படியில் வந்து நின்ற சூழல் இருந்தது. ஆனால், இன்று ஒவ்வொரு முடிவை எடுப்பதற்கும் டெல்லிக்குச் சென்று வரும் நிலைக்கு அ.தி.மு.க.வைத் தரம் தாழ்த்திய எடப்பாடி பழனிசாமி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்களையும் விமர்சிப்பது தேவையற்றது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேர்தல் களத்தில் பல்வேறு சவால்களைச் சந்தித்துப் படிப்படியாக வளர்ந்த கட்சி. அதன் தலைவர் எழுச்சித் தமிழர் தொல். திருமாவளவன், ஒவ்வொரு தேர்தலிலும் தனது வெற்றியை நிரூபித்து, தி.மு.க. தலைமை யால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். நல்லுறவோடு இருக்கும் இக்கூட்டணியைப் பழனிசாமி விமர்சனம் செய்கிறார்.

**பா.ஜ.க.வுக்கு பெரிய இடம் கொடுத்த பழனிசாமி!**

அவருடைய கூட்டணியில் பா.ஜ.க.விற்கு கடந்த முறையை விட அதிக இடங்களைக் கொடுத்திருப்பது மட்டுமல்லாமல், பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்தில் இன்னும் கூடுதல் இடங்கள் போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது. பா.ஜ.க.விற்கு 27 இடங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், த.மா.கா., இந்திய ஜனநாயகக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புதிய நீதிக் கட்சி போன்ற கட்சிகளும் தாமரைச் சின்னத்திலேயே போட்டியிடுகின்றன. தமிழ்நாட்டில் நோட்டாவிற்கு கீழே இருந்த தாமரைக்கு, எடப்பாடி பழனிசாமி ஒரு மிகப்பெரிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்.



அ.தி.மு.க. தொண்டர்களுடைய சுயமரியாதையைக் காக்கும் வகையில் செயல்படுவதுதான் அந்த இயக்கத்திற்குச் செய்யும் நற்பணியாகும். அதை விடுத்து அவர் தி.மு.க. கூட்டணியைக் கூறிக்கொண்டிருக்கிறார். அவர் என்னதான் மேக்கப் போட்டுக் கொண்டு மறைக்க நினைத்தாலும், அவருடைய ஒவ்வொரு அறிவிப்பிற்குப் பின்னாலும் அமித்ஷா இருக்கிறார் என்பது கிராமத்து மக்களுக்கும் தெரிந்த உண்மையாவே இருக்கிறது.

அ.தி.மு.க. என்பதை அடிமை தி.மு.க. என்று பெயர் மாற்றும் அளவிற்கு எடப்பாடி பழனிசாமி கொண்டு சென்றுவிட்டார் என்று அக்கட்சியினரே குற்றம் சாட்டுகின்றனர். அமித்ஷா கொடுக்கும் ஸ்கிரிப்ட்களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார். கூட்டணிக் கட்சிகளுக்குக் கொடுக்கும் இடங்களை அவர் சொன்னாலும், அ.தி.மு.க. போட்டியிடும் இடங்களைக்கூட மற்றவர்கள்கணக்கிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தான் அவருடைய ஒவ்வொரு முடிவும் இருக்கிறது.

மோடியா? லேடியா? என்று கேட்டு பா.ஜ.க.விற்குச் சவால் விடுத்தவர் ஜெயலலிதா அம்மையார். ஆனால் இன்றைக்கு மோடியே எல்லாம் என்று கூறி அம்மையாரின் ஆன்மாவையே சாகடிக்கும் அளவிற்கு எடப்பாடி பழனிசாமி சென்றுவிட்டார். டெல்லி பா.ஜ.க.விற்கு ஒரு போதும் அடிபணிய மாட்டோம் என்று சொல்லிக்கொண்டே, மீண்டும் மீண்டும் அவர் அடிபணிந்து கொண்டிருக்கிறார்.

இந்த நேரத்தில்தான், தமிழ்நாட்டு மக்கள் தமிழ்நாடு 'அவுட் ஆப் கண்ட்ரோல்' என்று டெல்லிக்கு உரத்த குரலில் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் மக்கள் ஒன்றிணைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தல் மிகப்பெரிய வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குப் பெற்றுத்தரும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி மீண்டும் மலர இருக்கிறது. இந்த மகத்தான வெற்றியை எட்டுவதற்காக நிலங்களை முதலமைச்சர் முறைப்படுத்தத் திட்டமிட்டுத் தொடங்கியிருக்கின்றார்.

ஒவ்வொரு கூட்டணிக் கட்சியோடும் முறையாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, மூன்று முறை பேச வேண்டிய சூழல் வந்தாலும், மனம் உவந்து பேசி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அதேபோல எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பதையும் தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட குழுவினர் கூட்டணிக் கட்சிகளோடு பேசி ஒருமனதாக முடிவெடுக்கப்படும்.

மாறாக, என்.டி.ஏ. கூட்டணி என்பது டெல்லியில் அமித்ஷாவின் கட்டளைக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதையோடும் தன்மானத்தோடும் இயங்கும் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெறும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார்கள்.

காங்கிரஸ் மற்றும் தே.மு.தி.க.வின் பாரம்பரியம் மற்றும் செல்வாக்கைக் கருதி இடங்கள் ஒதுக்கப்பட்டதை வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெளிவாக ஏற்றுக்கொண்டதாகவும், இதில் எந்த மனவருத்தமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதே சமயம், சீட் கிடைக்காத விரக்தியில் வேல்முருகன் முன்வைக்கும் புகார்கள் தவறானவை. தி.மு.க. ஆட்சியில் அதிகாரம் ஓரிடத்தில் குவியவில்லை என்பதற்குத் தொலைதூர மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரான நானே சாட்சி. அமைச்சர்கள் அனைவரும் சுதந்திரமாகவும் கூட்டுப் பொறுப்போடும் செயல்படுகிறோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

## சிவகங்கை தொகுதியில்

# அ.தி.மு.க. எம்.எல்.ஏ. மீண்டும் போட்டியிட எதிர்ப்பு!

*சிவகங்கை, மார்ச் 27-*

*நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் தற்போதைய மாவட்ட செயலாளர் தற்போதைய எம்.எல்.ஏ. பி.ஆர். செந்தில்நாதன் அ.தி.மு.க.சார்பில் போட்டியிட வாய்ப்புகள் அதிகம் உள்ளதாக கூறப்படுகிறது. சட்டமன்றத் தேர்தல் போட்டியிட விருப்ப மனுவினை முன்னாள் அமைச்சர் பாஸ்கரன் மகன், அம்மா பேரவை சார்பில் இராமு. இளங்கோவன் தொடங்க ஏராளமான அ.தி.மு.க.வினர் மனு கொடுத்திருந்தார்கள்.*

*ஆனால் மாவட்டச் செயலாளர் தற்போதைய எம்.எல்.ஏ. பி.ஆர்.செந்தில் நாதனுக்கு மீண்டும் ஒதுக்கீடு செய்து உள்ளதாக கூறப்படுகிறது. இதனால் செந்தில் நாதன் தேர்தல் பணிகளை துவங்கி விட்டார்.*

*இந்த நிலையில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி மற்றும் மாவட்டம் முழுவதும் என் தொகுதி என் உரிமை என்ற பெயரில் அ.தி.மு.க .தொண்டர் கள் என்ற பெயரில் சுவரொட்டி ஒட்டப் பட்டு உள்ளது .அதில் தேவகோட்டையில் இருந்து சிவகங்கையில் ஏன்மாறி போட்டியிட வேண்டும் காரைக்குடியில் போட்டிஇடலாம் சிவகங்கையிலிருந்து தேவகோட்டையில் போட்டியிட முடியுமா அதற்கு தலைமை வாய்ப்பு தருமா மாவட்ட செயலாளர் காரைக்குடியில் போட்டியிடலாமே சிவகங்கையில் கட்சியினர் புறக்கணிக்கப் படுவது தொடர் கதையாக உள்ளது. சிவகங்கை தொகுதியில் கட்சிக்காக உழைத்தவர்கள் பதவிக்கு வரமுடியவில்லை. தொண்டர்கள் உணர்வுகளை மனக் குமுறல்களை தலைமை புரிந்து கொள்ள வேண்டும்.இத்தகைய சுவரொட்டிகளை அ.தி.மு.க. தொண்டர்கள் என்ற பெயரில் மாவட்டம் முழுவதும் ஒட்டி உள்ளார்கள். இதனால் சிவகங்கை மாவட்ட அ.தி.மு.க.வில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.*

*இந்தசுவரொட்டியினால் மாவட்டம் முழுவதும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. அ.தி.மு.க தொண்ட ர் கள் முழு அளவில் தேர்தல் வேலை பார்ப்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.*

முரசொலி அலுவலக தொலைபேசி எண் மாற்றம்!
புதிய எண்
044 - 4584 9900